முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர். ப.சேகர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.

ஜூன் 15 ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஜூன் 14 - தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றியளித்த தமிழ்நாடு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா சிறப்பான வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டுவிழாஎன" முப்பெரும் விழா" ஜூன் 15 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் முப்பெரும் விழாவில்தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகநிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் நமது கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்த்து நமது கழகத் தலைவர் அவர்களின் வழி நடப்போம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - முனைவர் பி.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வோம்!

ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், ஜூன் 14 - நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியைப் பெற்று, நூற்றாண்டின் நாயகராம் தலைவர் கலைஞர் அவர்களின் காலடியில் காணிக்கை ஆக்குவோம்" என்று உறுதியேற்று, அந்த உறுதியைச் செயல்படுத்திக் காட்டிய கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கழக பொதுச் செயலாளர் துரை முருகன் அவர்களின் அறிவிப்பை தொடர்ந்து, கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் வருகின்ற ஜூன் 15 ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா - நாற்பது தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில் நடைபெற

வுள்ளது.

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கூட்டணி கட்சி தலைவர்கள், வெற்றி பெற்ற நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதால் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் கலந்து கொள்ளும் ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

நியூஜெர்சி பாலா ஒருங்கிணைப்பு - முனைவர் துரை சந்திரசேகரன் சிறப்புரை!

அமெரிக்கா - நியூஜெர்சி மாநிலத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

தீபா பிரியாபெரியசாமி - கோபி கதிர்வேல் - ம.வீ.கனிமொழி சிறப்புரையாற்றினர்!

வாஷிங்டன், ஜூன் 14- அமெரிக்கா நியூஜெர்சி மாநிலத்தில் கலைஞர் அறக்கட்டளை அமெரிக்கா, பெரியார் பன்னாட்டமைப்பு அமைப்புகளின் சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு, 101ஆவது பிறந்தநாள் விழா மற்றும் தமிழ்நாட்டில் பாசிச சக்திகளை வீழ்த்தி 40 க்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற வைத்த உலகத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கை திராவிட நாயகன் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக விழா கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வை கலைஞர் அறக்கட்டளை அமெரிக்காவின் நிர்வாகி நியூஜெர்சி பாலா ஒருங்கிணைத்து அனைவரையும் வரவேற்று பேசினார்.

திராவிடர் கழகத்தின் பொது செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் தலைமையில் பினதங்கிய மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளை பற்றி திருவள்ளுவர் தமிழ் நூலகத் தலைவர் தீபாபிரியா பெரியசாமி, விவசாயிகளுக்கு செய்த சாதனைகளை பற்றி டெலவேர் பெருநிலத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் கோபி கதிர்வேல், எழுத்தாளராக கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளை பற்றி பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ம.வீ.கனிமொழி ஆகியோர் உரையாற்றினார்கள்.

திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகரன் தமிழ்நாட்டில் கலைஞர் அவர்களால் பயன் பெறாத குடும்பங்களே இருக்க முடியாது என்றும் நூற்றாட்டின் சாதனையாளர் கலைஞர் என்றும் அந்த சாதனைகளை திராவிட நாயகன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தொடர்ந்து செய்வதை பாராட்டி உரையாற்றினார்.

இறுதியாக தமிழ்நாட்டில் பாசிச சக்திகளை வீழ்த்தி 40 க்கு 40 தொகுதிகளில் வெற்றி பெற வைத்த உலகத் தமிழர்களின் ஒற்றை நம்பிக்கை திராவிட நாயகன் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் இளமாறன், பிரபு சிவகுருநாதன், செந்தில்நாதன், பிராசத் பாண்டியன், ரியாஸ், பிரபு ரங்கராஜீ, எழில்,அறிவுப் பொன்னி, கிருத்திகா, ஹர்சினி, மயிலை பாலா, சுபாஷ், சந்துரு, ஆதவன், குழலினி, இலக்கியா, இனியா, இலக்கணன், எய்னி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமெரிக்க நியூ ஜெர்சி மாநிலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெற்றதைத் தொடர்ந்து திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை நியூ ஜெர்சிபாலா ஒருங்கிணைத்துள்ளார். இந்நிகழ்ச்சிக்கு முனைவர் துரை.சந்திரசேகரன் தலைமை வகித்தார். இதில் தீபா பிரியா பெரியசாமி, கோபி கதிர்வேல், ம.வீ.கனிமொழி உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர். இதில் அமெரிக்க நியூஜெர்சி தமிழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அன்னியூர் சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர். தெ. கௌதம் சிகாமணி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, தயாநிதி மாறன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில்

81வது மருத்துவப் பட்டப்படிப்பு நிறைவு விழா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்!

சென்னை,ஜூன் 14- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (12.6.2024) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 81வது மருத்துவ பட்டப்படிப்பு நிறைவு விழாவில் கலந்து கொண்டுமருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி, வாழ்த்தி விழா பேருரையாற்றினார். அது பின்வருமாறு:

ரூ.159.70 கோடி செலவில், இம்மருத்துவமனையில், 5 மருத்துவ கட்டிடங்கள் மற்றும் மின்தூக்கிகளும், ரூ.13 கோடி மதிப்பீட்டில் 43,642 சதுரடி பரப்பளவில், தரை மற்றும் 5 தளங்கள் கொண்ட செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடங்களும், ரூ.22 கோடி மதிப்பீட்டில் 71,607 சதுரடி பரப்பளவில், தரை மற்றும் 6 தளங்கள் கொண்ட மாணவியர் விடுதி கட்டிடமும், ரூ.112 கோடி மதிப்பீட்டில் 2,85,005 சதுரடி பரப்பளவில், தரை மற்றும் 6 தளங்கள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடங்களும், ரூ.12 கோடி மதிப்பீட்டில் அதிநவீன சமையல் கூடம், சலவையக கட்டிடங்களும், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ், வெள்ளி விழா கருத்தரங்கு கூடம் உள்கட்டமைப்பு மேம்பாடு கட்டிடங்களுக்கான பணி முடிவடைந்துள்ளது. மேலும் ரூ.50 இலட்சம் சி.எஸ்.ஆர். நிதியின் கீழ், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான 2 மின் தூக்கிகள் அமைக்கப்படுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

மேலும் இம்மருத்துவமனையில் பட்டம் பெறும் இளங்கலை மருத்துவ மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 245, எனவே பட்டங்கள் மற்றும் பதக்கங்கள் பெறும் அனைத்து மருத்துவ மாணவ மாணவியர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மரு.நாராயணசாமி,மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. பாலாஜி, மருத்துவக்கல்லூரி துணை முதல்வர், மருத்துவமனை கண்காணிப்பாளர், நிலைய மருத்துவ அலுவலர், மருத்துவப் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, ஜூன் 14 - ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட் சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,

நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியடைய வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா" பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும். நாகை மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்,கிளை வார்டுக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், ஒன்றிய, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு. ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி

பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, சிறு பான்மை யினர் நல உரி மைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆண்டிமடம் எஸ். சிவசுப்பிரமணியம்

ஜூன் 14 (2019)

தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, தந்தை பெரியார் கலந்து கொண்ட கூட்டங்களில் அவரோடு சுற்றுப்பயணம் செய்தவர்.

1971ல் கழகத்தில் இணைந்து, ஆண்டிமடம் ஒன்றியச் செயலாளர், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட துணைச் செயலாளர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், வெளிமாநில தொடர்பு செயலாளர், அரியலூர் மாவட்ட அவைத்தலைவர், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் என கழகத்தில், ஒன்றியம் முதல் தலைமை கழகம் வரையில் பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணி ஆற்றி வந்தவர்.

ஆண்டிமடம் ஒன்றிய பெருந்தலைவராகவும், ஆண்டிமடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். 1998ல் மாநிலங்களவை உறுப்பினராகி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

இவரது கழகப் பணியினைப் சிறப்பிக்கும் வகையில், 2015ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது திருக்கரங்களால் "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.